பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 04 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. யூனஸ்கோவின் உலக பதிவேட்டில் பகவத் கீதை மற்றும் நாட்டிய சாஸ்திரம் சேர்க்கப்பட்டிருப்பது இந்தியர்களை பெருமிதம் கொள்ளச் செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. நாட்டில் மின்னணு பொருட்கள் உற்பத்தி கடந்த பத்து ஆண்டுகளில் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.
4. தில்லியில் நிலவும் காற்று மாசு பிரச்சினைக்கு தீர்வு காண முந்தைய ஆம் ஆத்மி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா குற்றம்சாட்டியுள்ளார்.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

யூனஸ்கோவின் உலக பதிவேட்டில் பகவத் கீதை மற்றும் நாட்டிய சாஸ்திரம் சேர்க்கப்பட்டிருப்பது உலகம் முழுவதிலும் உள்ள இந்தியர்களை பெருமிதம் கொள்ளச் செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நம் நாட்டின் கலாச்சாரத்திற்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரம் இது என்றும் அவர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பகவத் கீதை மற்றும் நாட்டிய சாஸ்திரத்தில் உள்ள கருத்துக்கள் அனைவரையும் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளன என்றும், பல நூற்றாண்டுகளாக நாகரீகத்தை வளர்க்க துணை நிற்கின்றன என்றும் பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நம் நாட்டின் நாகரீக பாரம்பரியத்திற்கு சிறப்பு சேர்க்கும் தருணம் இது என்று மத்திய கலாச்சாரத்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இந்நூல்கள் நமது சிந்தனை உணர்வு மற்றும் வாழ்க்கையை வடிவமைப்பதாக உள்ளன என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

புனித வெள்ளியையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில், இந்நாள் ஏசு கிருஸ்துவின் கருணை, இரக்கம் ஆகியவற்றை பின்பற்றி செயல்பட நம்மை தூண்டுவதாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில் ஏசுகிருஸ்துவின் தியாகத்தை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.

[]<<<>>>[]

நாட்டில் மின்னணு பொருட்கள் உற்பத்தி கடந்த பத்து ஆண்டுகளில் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துளளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்னணு பொருட்கள் ஏற்றுமதி கடந்த பத்து ஆண்டுகளில் ஆறு மடங்கு உயர்ந்திருப்பதாகக் கூறினார்.

மின்னணு உதிரிப் பாகங்கள் உற்பத்தி திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை அண்மையில் அனுமதி அளித்தது இத்துறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.,

இதன் காரணமாக வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும் என்று திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

மேற்குவங்க மாநிலம் முர்ஷிதாபாத் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் மூன்று பேர் கொண்ட குழு ஒன்றை அமைக்க கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம், இந்த குழுவில் தேசிய மனித உரிமைகள் ஆணையம், மேற்கு வங்க மனித உரிமைகள் ஆணையத்தின் பிரதிநிதிகள், அம்மாநில சட்ட சேவைகள் ஆணையத்தின் உறுவப்பினர் செயலர் இடம்பெற வேண்டுமென்று தெரிவித்துள்ளது,

இக்குழு அடுத்த மாதம் 15-ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக தேசிய புலனாய்வு முகாமையின் விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொல்கத்தா உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதற்கிடையே தேசிய மகளிர் ஆணையக் குழுவினர், முர்ஷிதாபாத் வன்முறை சம்பவத்தில் பாலியல் ரீதியில் பாதிக்கப்பட்ட மகளிரை நேரில் சந்தித்து இன்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**[]<<<>>>[]**

பஞ்சாப் மாநில எல்லைப்பகுதியான அம்ரிட்ஸர் மற்றும் **Tarn taran** மாவட்டங்களில் கடந்த 36 மணி நேரத்தில் ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருட்களை எல்லைப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

அம்ரிட்ஸரில் அம்மாநில காவல்துறையினருடன், எல்லை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையில் துப்பாக்கிகள் மற்றும் குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

**Tarn taran** மாவட்டத்தில் மேற்கொள்ளபபட்ட சோதனையின்போது ஆயதங்களுடன் போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்தாக எல்லை பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.,

எல்லைக்கு அப்பாலிலிருந்து ட்ரோன்கள் மூலமாக இவை இந்திய எல்லைக்குள் வீசப்பட்டுள்ளதாக பாதுகாப்புப்படை கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டத்தில் 439 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்ததுடன்,, 388 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கும் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

இம்மாவட்டத்தின் ஆண்டார்குப்பத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், மாநிலத்தில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கல்லூரியில் சேருவது கடந்த மூன்று ஆண்டுகளில் 30 சதவீதம் அதிகரித்துள்ளதாகக் கூறினார்.

தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநில அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலத் திட்டங்களையும் திரு மு க ஸ்டாலின் எடுத்துரைத்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மருத்துவக் கல்வி பாடப்புத்தகங்கள் தமிழில் மொழிப் பெயர்க்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தென்காசி, ராணிப்பேட்டை உள்ளிட்ட ஆறு மாவட்டங்களில் புதிதாக மருத்துவக் கல்லூரிகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - மா சு ) ---- 32 செகண்ட்*

**[]<<<>>>[]**

தில்லியில் நிலவும் காற்று மாசு பிரச்சினைக்கு தீர்வு காண முந்தைய ஆம் ஆத்மி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா குற்றம்சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காற்று மாசு பிரச்சினையை எதிர்கொள்வதற்கான திட்டங்கள் முறையாக வகுக்கப்பட்டு ஆண்டு முழுவதும் செயல்படுத்தப்பட இருப்பதாகக் கூறினார்.

காற்று மாசு-வை குறைக்கும் வகையில் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அரசு ஊக்குவித்து வருவதாகவும், பொதுமக்கள் அதற்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் திருமதி ரேகா குப்தா கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

இஸ்ரேலின் தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்த முன்மொழிவை நிராகரிப்பதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

போரை முடிவுக்குக் கொண்டு வருவது மற்றும் பாலஸ்தீன கைதிகளுக்குப் பதிலாக அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவிப்பது தொடர்பான விரிவான பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமென்று ஹமாஸ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

45 நாள் போர் நிறுத்தம் மற்றும் குறிப்பிட்ட அளவிலான பிணைக் கைதிகளை விடுவிப்பது என்ற இஸ்ரேலின் அறிவிப்பு, போரை நீட்டிக்கவே வழிவகுக்கும் என்று அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

[]<<<>>>[]

இந்தியா – பிரிட்டன் இடையேயான பாதுகாப்பு தொழில்துறை மாநாடு லண்டனில் நிறைவடைந்துள்ளது.

இரண்டு நாள் நடைபெற்ற இந்த மாநாட்டில் பங்கேற்று பேசிய பாதுகாப்புத்துறைச் செயலர் திரு ராஜேஷ்குமார் சிங், பாதுகாப்பு தொழில்துறை சார்ந்த இந்திய புத்தொழில் நிறுவனங்களின் செயல்பாடு குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டிருப்பதாகத் தெரிவீத்தார்.

உத்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பாதுகாப்புத் தொழில்துறை நிறுவனங்களில் முதலீடு செய்ய பிரிட்டன் நிறுவனங்கள் முன்வர வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

பாதுகாப்புத் தொழில்துறையை வலுப்படுத்துவதில் பிரிட்டனுடன் இந்தியா இணைந்து செயல்பட்டு வருவதாக திரு ரஜேஷ்குமார் சிங் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.,

**[]<<<>>>[]**

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா – புருண்டியன் **sada nahimana** இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் எதிர்த்து ஆடவிருந்த பிரான்ஸின் **Alyssa reguer** – இத்தாலியின் கமிலா சலோலினி இணை காயம் காரணமாக வெளியேறியதை அடுத்து இந்த இணை வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது,.

**[]<<<>>>[]**

ஆசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Shourya Ambure** வெண்கலப்பதக்கம் வென்றார்.

சவுதி அரேபியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், 18 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 100 மீட்டர் தடைதாண்டும் ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**[]<<<>>>[]**

போர்ச்சுக்கலில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் கலியாண்டா பூனாச்சா, ஸ்பெயினின் **Sergio Martas Gornes** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை போர்ச்சுக்கலின் **Francisco Rocha – Henrique Rocha** இணையை 6-2, 6-4 என்ற செட்கணக்கில் வென்றது.

இப்போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.